தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

கார்த்திகை 2, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 நவம்பர் 18, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து."

தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக்கொண்டு போவதுபோல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு, வெற்றி கிட்டும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. கி. வேணு, திரு. பி. வெங்கடசாமி, திரு. பா. வேல்துரை, திரு. தோப்பூர் திருவேங்கடம் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கி. வேணு அவர்கள் 20–10–2023 அன்றும், திரு. பி. வெங்கடசாமி அவர்கள் 21–10–2023 அன்றும், திரு. பா. வேல்துரை அவர்கள் 24–10–2023 அன்றும் மற்றும் திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் 10–11–2023 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கி. வேணு அவர்கள் 1989–1991 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் கும்மிடிப்பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் 1967–1971, 1971–1976 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் ஒசூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. பா. வேல்துரை அவர்கள் 1996–2001 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் சேரன்மகாதேவி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் அன்றைய வட ஆற்காடு மாவட்டம், கணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் திரு. பங்காரு அடிகளார் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் திரு. பங்காரு அடிகளார் அவர்கள் 19–10–2023 அன்று தமது 82–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.